[27th July 1964

Amenities to Harijans

* 732 *Q.*—SRI K. A. MATHIALAGAN : } Will the Hon. the
SRI RAMA ARANGANNAL : }
Minister for Home be pleased to state—

(*a*) whether the Non-official Committee set up by the Government to investigate and report about the acquisition of lands for house-sites, burial grounds, etc., for Harijans, has submitted its report; and

(*b*) if so, whether a copy of the same will be placed on the Table of the House?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : அரிசனங்களுக்கு நிலம் ஒப்படை செய்வதில் நிர்வாக இயந்திரம் ஆமை வேகத்தில் இருப்பதால் பெரிய கால தாமதம் ஏற்பட்டு வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதையெல்லாம் போக்கி விரைவாகச் செய்வதற்கு முயற்சி செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் கமிட்டியை ஏற்படுத்தினோம். அந்தக் கமிட்டி எல்லா ஜில்லாக்களுக்கும் சென்று, அதனுடைய அபிப்பிராயத்தை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும் கட்டத்திலே இப்பொழுது ரிப்போர்ட் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். ரிப்போர்ட் அரசாங்கத்திற்கு வந்த பிற்பாடு அவர்கள் சொல்லும் ஆலோசனைகளை மேற்கொண்டு துரிதமாக நிலங்களை ஜாரி செய்து கொடுக்க ஏற்பாடு செய்வோம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : நாம் பல நன்மைகளை ஹரிஜனங்களுக்குச் செய்திருந்தாலும்கூட, ஹரிஜனங்கள் பிணத்தைத் தூக்கிச் செல்வதற்கு ரோடு வசதி இல்லாமலும், சுடுகாடு இல்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாவது இந்த நிலையைச் சீர்திருத்த அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : This is only a suggestion and not a question.

கனம் திரு. பூ. கக்கன் : மயானம் ஏற்படுத்துவது, மயானம் அமைப்பது எல்லாவற்றையும் அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டி பரிசீலனை செய்து முடிவு எடுக்கும். இரண்டு வருஷத்தில் என்று அல்ல ; ஒரு வருஷத்திலும் முடிந்து விடலாம் ; இரண்டு வருஷத்திற்கு மேலும் ஆகலாம். ஜனத்தொகை அதிகமாகிக் கொண்டே வர வர கோரிக்கைகள் பெருகிக் கொண்டே போகும்.

27th July 1964]

திரு. மு. கருணாநிதி : ஹரிஜனங்களுக்கு வழங்கப்படும் வீட்டு மனைகள் ஊரின் ஓரப்பகுதிகளில் வழங்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்பு அடிப்படையில் ஊரின் மத்தியப் பகுதிகளில் அவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஊரின் மத்தியப் பகுதியில் புறம்போக்கு நிலங்கள் இருந்தால் கொடுக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த நிலங்களைக் கொடுப்பதில் நிர்வாக இயந்திரத்தால் காலதாமதம் ஏற்படுகிறது. இதற்கு என்னால் பல உதாரணங்களைக் கொடுக்க முடியும். ஆகவே, இதைத் தவிர்க்க அரசாங்கம் உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்குமா ?

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் முதலில் போட்ட அதே கேள்வியைத்தான் போடுகிறார்கள். முன்பு 'ஆமை வேகம்' என்று சொன்னார்கள். இப்போது காலதாமதம் ஆகிறது என்று சொல்லுகிறார்கள். அதைவிட 'ஸ்லோ' ஆகப் போகக்கூடிய பிராணி ஒன்றும் கிடையாதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நத்தை வேகம் என்று சொல்லலாம்.

கனம் திரு. பூ. கக்கன் : நில ஆர்ஜிதம் செய்வதைத் துரிதப்படுத்தவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். மாதத்திற்கு ஒரு முறை ரெவின்யூ போர்டார் தகவல் கொடுக்கிறார்கள். இப்போது அமைக்கப்பட்டிருக்கக்கூடிய கமிட்டி இதையெல்லாம் பரிசீலித்து முடிவு கூறுவார்கள். பிறகு மேலும் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* 733 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are constructing houses for those belonging to valayar community in Poolankurichi village in Thirupathur Panchayat Union in Ramanathapuram district;

(*b*) when that scheme was sanctioned;

(*c*) the reason for the delay in completing these houses; and

(*d*) whether the Harijans of that village have applied for a Harijan colony?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம். பூலாங்குரிச்சி கிராமத்தில் உள்ள வலையர் வகுப்பினருக்காக 10 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டத்திற்கு 1962-63-ல் அனுமதி வழங்கப்பட்டது.

(உ) முதலில் இத்திட்டத்தினால் பயனடையவிருந்த நபர்கள், வேலையை முடிப்பதற்குத் தங்கள் பங்கு சரக்குகளை அல்லது உழைப்பைக் கொடுத்து உதவுவதன்மூலம் காண்ட்ராக்டருடன் ஒத்துழைக்கவில்லை. எனவே, இத்திட்டத்தினால் நன்மை பெறுவதற்காக வேறு நபர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. அவர்